THE MADRAS LEGISLATIVE COUNCIL

Saturday, the 2nd March 1968.

The House met in the Council Chamber, Fort St. George, at three of the clock, Mr. Chairman (THE HON. THIRU M. A. MANICKAVELU) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS.

Land Revenue

***149 *Q.*—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Food be pleased to state—**

(*a*) the revenue realised during 1966-67 district-wise by way of land revenue ; and

(*b*) the anticipated reduction in income through land revenue district-wise as a result of the cancellation of land revenue on dry lands ?

நிலவரி

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) நிலவரி மூலம் மாவட்ட வாரியாக 1966-67-ல் வந்த வருமானம் எவ்வளவு ?

(இ) புன்செய் நிலவரி ரத்து செய்ததின் மூலம் மாவட்டவாரியாக எவ்வளவு நிலவரி குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : புள்ளி விவரங்களைக் கொண்ட இரண்டு விவர அறிக்கைகள் [a] பேரவை முன் வைக்கப்பட்டுள்ளன.

திரு. என். ஆர். தியாகராஜன் : தலைவர் அவர்களே, கொடுத்துள்ள அறிக்கையில் மூன்றாவது காலமாகிய நிலுவையில் ரூ. 2,51,37,846 என்று இருக்கிறது. அவ்வளவு அதிகமாக இருப்பதற்குக் காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : வழக்கமாக நிலவரி வசூலில் இதுபோல் பாக்கி இருப்பது உண்டு. இந்த ஆண்டைப் பொறுத்தவரையில் அதில் முன்னேற்றம் காணப்படுகிறது. இங்கே கொடுத்திருப்பது போன வருஷக் கணக்கு. முந்தைய அரசு வசூல் செய்த கணக்கு. இந்த வருஷத்தைப் பொறுத்தவரையில் செங்கல்பட்டு, ராமநாதபுரம் போன்ற மாவட்டங்களில் இம்மாதிரியான பாக்கிகள் இருக்கின்றன. நிலவரி வசூலில் நல்ல வகையில் இப்போது இருந்து வருகிறோம் என்பதை பெருமையோடு சொல்லிக் கொள்கிறேன்.

திரு. என். ஆர். தியாகராஜன் : ஒரு ஆண்டில் மாத்திரம் 2½ கோடி அளவுக்கு வரி வசூலாகவில்லை என்றால் இதுபோல் ஒவ்வொரு ஆண்டும் சேர்ந்து எவ்வளவு வராமல் போயிருக்கும் ? வசூல் செய்யும் உத்தியோகஸ்தர்கள் ஆபீசர்கள் அத்தனை பேரையும் மாற்றி வசூலை நல்ல முறையில் செய்ய உத்தரவு இடப்படுமா ?

---

[a] Printed as Appendix I on page 226

[2nd March 1968

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : அவர்களை மாற்ற வேண்டுமானால் வேறு மாகாணத்திற்குத்தான் மாற்றவேண்டும். பல காரணங்களால் ஒவ்வொரு இடத்திலும் பல லட்சங்கள் பாக்கியிருக்கின்றன. இந்த வருஷம் கடந்த பத்து மாதங்களில் நல்ல முயற்சிகளின் காரணமாக திருத்தமான முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது என்பது புள்ளிவிவரம் மூலமாகத் தெரிகிறது.

திரு. வி. கே. ராமசாமி முதலியார் : புஞ்சை வரி வஜா செய்வதைப் பற்றி சர்க்கார் உத்தரவு அனுப்பியிருக்கிறார்களா ? எங்கள் மாவட்டத்தில் இன்னும் புஞ்சை நிலங்களுக்கு டிமாண்ட் போட்டு எங்கள் எல்லோருக்கும் வந்திருக்கிறது. அதை அரசாங்கம் உத்தரவின் மூலம் தெரிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : போன பசலியிலிருந்து 1967 ஜூலை மாதம் 1-ம் தேதி முதற்கொண்டு, புஞ்சைக்கு வரி கிடையாது என்ற உத்தரவு கடந்த ஆண்டிலேயே பிறப்பிக்கப்பட்டுவிட்டது. அந்த உத்தரவு சில இடங்களில் வராமல் இருக்குமானால் நிர்வாகத்தில் ஏற்பட்ட தவறாக இருக்கலாம். அப்படி நடந்திருக்க முடியாது என்பது என்னுடைய அழுத்தமான கருத்து.

திரு. கே. ராஜாராம் : இந்த கிஸ்தி பாக்கி சம்பந்தமாக 1376-வது பசலிக்கு டிமாண்ட் போட்டிருக்கும் காலத்தில் முந்தைய பாக்கியும் நடப்பு வருஷத்திற்கும் சேர்த்து போட்டதாக அர்த்தமா ? ஒரு வருஷ டிமாண்ட் மாத்திரமா என்று அறிய விரும்புகிறேன். ராமநாதபுரம் ஜில்லாவில் இரண்டு கோடிக்கு மேல் பாக்கியிருக்கிறது. மற்ற ஜில்லாக்களில் அவ்வளவாக இல்லை. ஆகையால் இந்த வருஷம் வரையில் சேர்த்து இரண்டு கோடி நிலுவை என்று போடப்பட்டிருக்கிறதா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : அதைப்பற்றிய விவரக் குறிப்பு இல்லை. பழைய பாக்கிகள் பொதுவாக சேர்க்கப்படுவதில்லை.

திரு. என். ஆர். தியாகராஜன்: இந்த இரண்டாவது விவர அறிக்கையில் 1374-வது பசலிக்கு ராமநாதபுரம் ஜில்லாவுக்கு டிமாண்ட் போட்டிருப்பதாகவும் புஞ்சை தீர்வை 1374 பசலிக்கு 15 லட்சம்தான் வருகிறது என்று கணக்கு இருக்கிறது. அதற்கு அடுத்த ஆண்டு வரவேண்டியது ரூ. 1½ கோடி என்று ஒன்றுக்கொன்று முரணாக இருப்பதாகத் தெரிகிறது. அதற்கு என்ன காரணம் ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : ராமநாதபுரம் மாவட்டத்தில் மொத்த டிமாண்ட் இரண்டு கோடி ரூபாய். வசூலானது 74 லட்சம் ரூபாய். பாக்கியுள்ளது ரூ. 1,26 லட்சம். இரண்டாவது என்பது 15 லட்சம் ரூபாய்.

திரு. என். ஆர். தியாகராஜன் : ஒரு ஜில்லாவில் மட்டும் 2 கோடி போடப்பட்டிருக்கிறது. Dry Area மோசமான பின்தங்கிய பகுதிக்கு இரண்டு கோடி ரூபாய் என்று இருப்பது சரிதானா ?

திரு. எம். ராஜா அய்யர் : தலைவர் அவர்களே, 1376 பசலியில் வர வேண்டியது 2 கோடி 51 லட்சம் ரூபாயில் ரூ. 1 கோடி 26 லட்சம் ராமநாதபுரம் மாவட்டத்தில் மட்டும் பாக்கியிருக்கிறது என்று அமைச்சர் தெரிவித்தார்கள். ஏன் அவ்வளவு பாக்கி அந்த மாவட்டத்தில் இருக்கிறது ? பின் தங்கிய பகுதியாக இருப்பதனாலா ? அப்படியிருந்தால் வரி வஜா செய்ய அரசாங்கம் யோசிக்குமா ? அப்படிச் செய்தால், ஒரு கோடி 25 லட்சம் என்பது குறைவதற்குச் சந்தர்ப்பம் ஏற்படுமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : ராமநாதபுரம் மாவட்டத்தைப் பொருத்த வரையில் அங்கு ஏற்பட்ட வெள்ளம், பஞ்சம் போன்றவைகளால் இது ஏற்பட்டிருக்கலாம். அந்தப் பகுதிகளில் எப்போதும் வரி பாக்கியிருப்பதும் வசூல் செய்யும்போது ஆடு மாடுகளைப் பிடித்து வருவது

மாக இருப்பதுண்டு. செங்கற்பட்டு மாவட்டத்திற்கு பிரத்யேகமான குணங்கள் உண்டு. கனம் உறுப்பினரைப்போன்று எதிர்க்கட்சியில் நான் இருக்கிறபோது அடிக்கடி இதுபற்றி கேட்டிருக்கிறேன். ஒரு முதலமைச்சர் ராமனுதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்தவராகவும், ஒருவர் செங்கற்பட்டு மாவட்டத்தைச் சேர்ந்தவராகவும் இருப்பதால் நில வரி வசூலாகாமல் இரு கிறதா அந்த மாவட்டங்களில் என்று, நான் கேட்டதுண்டு. அதை மாற்றியமைக்க இப்போது நல்ல ஏற்பாடுகள் நடந்து வருகின்றன.

THIRU A. R. DAMODARAN : In the Budget statement of the Chief Minister it has been stated that the tremendous balance in land revenue was due to the elections that were held in 1967. I come from Chingleput District and I happen to pay kist very regularly. May I, therefore, know whether there are any political motives and do the Government think that there are political motives in the non-collection of land revenue arrears that are held in each district ?

THE HON. THIRU K. A. MATHIALAGAN : I cannot probe into it, but the facts are there.

திரு. எஸ். ராஜமார்த்தாண்டம் : ராமனுதபுரம் ஜில்லாவிலுள்ள சிரமத்தைப் பற்றி நம் அமைச்சர் அவர்கள் நன்றுகப்புரிந்து பேசியதற்காக மகிழ்ச்சியடைகிறேன். அந்த ஒரு சந்தர்ப்பத்தை வைத்து வரியை வஜா செய்வதற்கு சர்க்கார் முன்வருமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : வஜா செய்யவில்லையே தவிர, பொதுவாகவே அந்தப் பகுதியில் ரொம்பநாளாக அரசாங்கமே வசூலில் தோல்வி அடைந்து வருகிறது. அதில் எவ்வளவு முன்னேற்றம் ஏற்பட முடியும் என்று பார்க்கவேண்டும்.

திரு. சி. பி. சிற்றரசு : வரி வஜா செய்வதற்கு நியாயமான காரணம் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : வரி வஜா என்பது சந்தர்ப்பங்களை அனுசரித்து தேவையை முன்னிட்டு செய்யப்படுகிறது.

திரு. என். வி. நடராசன் : தலைவர் அவர்களே, பப்ளிக் அக்கவுண்ட்ஸ் கமிட்டி கூட்டத்தில், நில வரி அதிகமாக வசூல் செய்யப்படவில்லை என்பதால் அரசாங்கம் தீவிர நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று சர்க்காருக்கு அறிவிக்கப்பட்டிருக்கிறதா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : சர்க்காருக்கு அறிவிக்கப் பட்டதா என்ற தகவல் என்னிடத்தில் இல்லை. இப்போது உள்ளது போன வருஷ வசூல் கணக்கு. அதைத்தான் கனம் உறுப்பினர் கேட்டார். இந்த வருஷம் நில வரி சம்பந்தமாக நல்ல அபிவிருத்தி ஏற்பட்டிருக்கிறது என்பதைப் பெருமையோடு சொல்லிக்கொள்கிறேன்.

திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை : கன்னியாகுமரி மாவட்டத்தில் ரூ. 2.35 லட்சம் பாக்கியிருப்பதாக 1966–67-ம் ஆண்டு கணக்கில் கூறப்பட்டிருக்கிறது. சிறிய மாவட்டத்தில் இவ்வளவு பெரிய பாக்கியிருப்பதற்கு நியாயமில்லை. மற்ற மாவட்டங்களிலுள்ளதைப்போல் பெரும் நிலச்சுவான்தார்கள் இருந்தால், அரசியல் காரணமாகக் கொடுக்காமல் இருக்கலாம். அப்படியில்லை. அந்தச் சூழ்நிலையில் இவ்வளவு பாக்கியிருப்பதைப் பார்க்கும்போது மாவட்டத்தலைமை அலுவலகத்தில் விளம்பரம் செய்து வரி விதிக்கிற அதிகாரிகள் செய்யும் தவறுகளால் அப்படி ஏற்பட்டிருக்கிறதா என்பதை அறியப்படுமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : கனம் உறுப்பினர் கூறுவது கூட நில வரி அம்சத்தில் தெளிவாகிறது. பொதுவாக நம்முடைய மாநிலத்தில் 60 லட்சம் பட்டாதாரர்கள் இருக்கிறார்கள். அதில் 45 லட்சம்

புஞ்சை பட்டாதார்களும், 15 லட்சம் உள்ள மற்ற பட்டாதார்கள் பத்து செண்ட் இருபது செண்ட் என்று வைத்திருக்கிறார்கள். அவ்வளவு பேரை யும் அணுகி வசூல் செய்ய வேண்டியிருப்பதால் இரண்டு லட்சம் பூர்த்தி யிருக்கிறது.

மிஸ்டர் சேர்மன் : வட ஆர்க்காடு ஜில்லாவில் மிகவும் குறைந்த பாக்கி அச்சடிக்கப்பட்டிருக்கிறது. அது சரிதானு, அல்லது Printer's devil என்பதா ? அப்படி யிருக்காது என்று நினைக்கிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : சபாநாயகர் அவர்கள் முன்பு ரெவின்யூ அமைச்சராக இருந்தபோது அங்கே நல்ல பாரம்பரியத்தை உருவாக்கியதால் எல்லோரும் அதைப் பயன்படுத்தலாம்.

Rice distribution

*150 *Q.*—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Food be pleased to state—

(*a*) whether any representations have been received for the distribution of rice to the villages through fair-price shops ;

(*b*) the villages in which rice is distributed to the villagers through fair-price shops ; and

(*c*) the reasons for the non-distribution of rice to most of the villages ?

அரிசி விநியோகம்

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கிராமங்களுக்கு அரிசி நியாய விலைக் கடைகள் மூலம் வினி யோகம் செய்ய வேண்டுமென்று கோரிக்கைகள் வந்தனவா ?

(இ) அதன்மீது எங்கெங்கு கிராம மக்களுக்கு அரிசி வினியோகம் செய்யப்படுகிறது ?

(உ) பெரும்பாலான கிராமங்களுக்கு அரிசி வினியோகம் செய்யாத காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : (அ) ஆம்.

(இ) திருநெல்வேலி மாவட்டத்தில் நியாய விலைக் கடைகள் வாயி லாக குடும்பக்கார்டுகள் மூலம் அரசாங்கம் அரிசி வழங்க வேண்டுமென்று சுமார் 286 கிராமங்களிலிருந்து முறையீடுகள் வந்தன. அவற்றிற் கிணங்க அரிசி வழங்கப்பட வேண்டுமென ஆணையிடப்பட்டது. கோயம் புத்தூர் மாவட்டத்தின் குடும்பக் கார்டுகளின்படி ஏறக்குறைய 11 ஊராட்சி களிலும் 18 கிராமங்களிலும் அரிசி வழங்கப்பட வேண்டுமென ஆணை யிடப்பட்டது. திருச்சிராப்பள்ளியில் சுமார் 48 கிராமங்களில் குடும்பக்கார்டு முறை செயலுக்குக் கொண்டுவரப்பட்டது. வேண்டுகோள் வந்ததன்பேரில் தருமபுரி மாவட்டக் கலெக்டர் குடும்பக்கார்டு முறையை மேலும் ஒரு கிராமத்திற்கு நீடித்துள்ளார்.

(உ) அரிசி போதுமான அளவு கிடைக்காத பகுதிகளில் குடும்பக்கார்டு முறையைச் செயலுக்குக் கொண்டு வருவதால் நியாய விலைக் கடைகள் வாயிலாக மக்களுக்குக் குறைந்த அளவு அரிசி வழங்குவதை உறுதிப் படுத்துவதே அரசாங்கத்தின் நோக்கமாகும். எனவே இத்தகைய பகுதி களில் உள்ள மக்கள் அவர்களுடைய முழுத்தேவைக்கும் வணிகர்களையே நம்பியிருக்கவேண்டியதில்லை. வெளிச்சந்தையில் போதுமான அளவு அரிசி கிடைக்காத இடங்களில் இந்த குடும்பக்கார்டு முறை கொண்டு வரப்பட்டுள்ளது. அரிசியும் மற்ற உணவு தானியங்களும் போதுமான அளவு கிடைக்கக் கூடிய பகுதிகளிலும் மக்கள் அவர்களுக்குத் தேவை